**அனுப்புநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 127311 /எச்.1/ 2020** **நாள். 29.02.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை –6 – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – இடைநிலை/மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள், மார்ச்/ஏப்ரல் 2020 – டிஸ்லெக்சியா பாதிப்பு உள்ள தேர்வர்கள் – விடைத்தாளில் சிவப்பு மையில் குறிப்பு எழுதுதல் – விடைத்தாட்களை சிப்பமாக்குதல் குறித்த அறிவுரைகள் – சார்ந்து.

-----

நடைபெறவுள்ள மார்ச் 2020 இடைநிலை / மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளின் போது **மாற்றுத்திறனாளித் தேர்வர்கள்** தொடர்பாக கீழ்க்காணும் நடைமுறைகள் தவறாமல் பின்பற்றப்பட வேண்டுமென்ற அறிவுரையை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கும் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**1. இருக்கை வசதி :**

கண்பார்வையற்றோர், காதுகேளாதோர் / வாய் பேசாதோர், மனநலம் குன்றியோர், எதிர்பாராத விபத்தினால் உடல் ஊனமுற்றோர், பாரிச வாயு தாக்கி பாதிப்புற்றோர், நரம்பியல் கோளாறு உள்ளோர் ஆகிய அனைத்துவகை மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கும் தரைத்தளத்தில் மட்டுமே தேர்வு இருக்கை வசதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**2. கூடுதல் நேரச் சலுகை :**

மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் அனைவருக்கும் வழக்கமான தேர்வு நேரத்துடன் கூடுதலாக 60 நிமிடங்கள் (1 மணி நேரம்) தேர்வெழுத தவறாமல் அனுமதி வழங்கப்படவேண்டும்.

**3. டிஸ்லெக்சியா தேர்வர் விடைத்தாள் :**

சொல்வதை எழுதுபவர் நியமிக்கப்படாமல் தேர்வெழுதும், டிஸ்லெக்சியா பாதிப்புற்ற தேர்வர்களது முதன்மை விடைத்தாளில் மட்டும் முதல் பக்கத்தில் **சிவப்பு நிற** மையினால் **"டிஸ்லெக்சியா தேர்வர்"** என்று எழுதப்படல் வேண்டும்.

**4. கூடுதல் நேரச் சலுகைப் பெற்ற தேர்வர்களின் விடைத்தாட்களை சிப்பமாக்குதல்:**

இடைநிலை, மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகளின் போது, கூடுதல் நேரச் சலுகை பெற்றுத் தேர்வெழுதும் தேர்வர்கள் உள்ள அறையின் கண்காணிப்பாளர்கள், தேர்வு நேரம் முடிவடைந்தவுடன் பிற தேர்வர்களின் விடைத்தாட்களை சிப்பமாக்காமல் கூடுதல் நேரச் சலுகைப் பெற்று தேர்வெழுதும் தேர்வரின் தேர்வு நேரம் முடியும் வரை காத்திருக்கவேண்டும். மேலும், தேர்வு நேரம் (பிற்பகல் 01.15 மணி) முடிவடைந்தவுடன் நிலையான படை உறுப்பினர்களும் கூடுதல் நேரம் தேர்வெழுதும் தேர்வர்கள் உள்ள அறைக்குச் சென்று கூடுதலாக கண்காணிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும்.

பின்னர், மேற்குறிப்பிட்ட தேர்வரின் விடைத்தாட்களை மற்ற தேர்வர்களது விடைத்தாட்களுடன் சேர்த்து ஒரே சிப்பமாக்கி முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**ஒம்./—**
**இயக்குநர்**

**நகல்**
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.